**செ.வெ.எண்.212/2018,** **நாள்: 20.03.2018**

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2018ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் டாக்டர்.மு.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, மாவட்ட தேர்தல் அலுவலர்கள், வாக்காளர் பட்டியல் அலுவலர்கள் மற்றும் தேர்தல் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.**

-----

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின் 2018ம் ஆண்டு கூட்டறவு தேர்தல் தொர்பான அறிவுரைக் கூட்டம் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் டாக்டர்.மு.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றுகையில் 2018ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் அறிவிப்பு, தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ள நிலையில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள தொடக்க நிலை கூட்டுறவுச் சங்களுக்கான தேர்தல் குறித்து வாக்காளர் பட்டியல் அலுவலர் மற்றும் தேர்தல் அலுவலர்களுக்கு தேர்தல் பணிகள் குறித்து விரிவான அறிவுரைகள் வழங்கினார். கூட்டுறவு தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் சங்கங்கள் தயாரிப்பதில் வாக்காளர் பட்டியல் அலுவலரின் பணிகள் குறித்தும், வேட்புமனு தாக்கல், வேட்பு மனு பரிசீலனை வேட்பு மனுக்கள் திரும்ப பெறுதல் மற்றும் இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுவது குறித்தும் போட்டியிருப்பின் தேர்தல் நடத்துவது குறித்து தேர்தல் அலுவலர்கள் முக்கிய பணிகள் குறித்தும் எடுத்துரைத்தார். கூட்டுறவு தேர்தலை தேர்தல் அலுவலர்கள் எவ்விதமான பிரச்சனைகள் இன்றி திறம்பட சுமூகமாக தேர்தல் நடத்துவது குறித்தும் ஆலோசனைகள் வழங்கினார்.

தேர்தல் பணியாற்றும் தேர்தல் அலுவலர்கள் வேட்பு மனுக்கள் பெறுவதிலிருந்து இறுதியாக தேர்தல் நடத்தி முடித்து நிர்வாகக்குழு பொறுப்பேற்றும் வரையில்அனைத்து பணிகளும் திறம்படமேற்கொள்ளவும், எவ்விதமான புகார்களுக்கு இடமளிக்காத வகையில் முனைப்புடன் பணியாற்றிட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

அதேபோன்று தேர்தல் நடைபெறும் கூட்டுறவுச் சங்களுக்கு தேவையான வாக்கு பெட்டிகள், பேப்பர் சீல் ஆகியவைகள் மற்றும் தேர்தல் உபகரணங்களை ஆகியவற்றை முன்கூட்டியே பெற்று தேர்தல் அலுவலர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட வேண்டுமென்றும், பதட்டம் ஏற்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரிய காவல்துறையின் பாதுகாப்புடன் தேர்தல் நடத்தவும், மேலும் அனைத்து சரக துணைப்பதிவாளர், செயற்பதிவாளர்/மாவட்ட தேர்தல் அலுவலர்கள் அவர்களது கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலையும் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைப்படி எவ்விதமான பிரச்சனைகளுக்கும் மற்றும் புகார்களுக்கும் இடமளிக்காமல் நடத்திட வேண்டுமென்றும் அறிவுரை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணைய அலுவலக கூடுதல் பதிவாளர்/செயலர் திரு. அந்தோணிசாமி ஜான்பீட்டர், காஞ்சிபுரம் மண்டல இணைப்பதிவாளர் திரு.ஆர்.கே.சந்திரசேகரன், காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கியின் இணைப்பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் திருமதி பா.ஜெயஸ்ரீ, காவல்துறை அலுவலர்கள், சரக துணைப்பதிவாளர்/மாவட்ட தேர்தல் அலுவலர்கள், செயற்பதிவாளர்/மாவட்ட தேர்தல் அலுவலர்கள் உட்பட அனைத்து அலுவலர்களும் கலந்து கொண்டனர்.